# இறைத்தூதன்
## கத்தோலிக்க வார இதழ்


கடவுள் தமது திருவுளத்தின் திட்டத்தின்படி அனைத்தையும் செயல்படுத்தி வருகிறார். அவரது தீர்மானத்தால் நாம் முன்குறிக்கப்பட்டு, கிறிஸ்து வழியாய் அவரது உரிமைப் பேற்றுக்கு உரியவரானோம். இவ்வாறு கிறிஸ்துவின் மேல் முதலில் நம்பிக்கை வைத்த நாங்கள் கடவுளுடைய மாட்சியைப் புகழ்ந்துபாட வேண்டுமென அவர் விரும்பினார். நீங்களும், உங்களுக்கு மீட்பளிக்கும் நற்செய்தியாகிய உண்மையின் வார்த்தையைக் கேட்டு, அவர்மீது நம்பிக்கை கொண்டு, வாக்களிக்கப்பட்ட தூய ஆவியால் அவருக்குள் முத்திரையிடப்பட்டீர்கள். (எபே 1:11-13)

# பேராயர் ஜூலியன் லியாவ் அவர்களின் மேய்ப்புப்பணி கடிதம்

*“சாவின் இருள்சூழ் பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும் நீர் என்னோடு இருப்பதால் எத்தீங்கிற்கும் அஞ்சிடேன்” (திபா 23:4)*

அன்பார்ந்த இறைமக்களே,

கடந்துச் செல்லும் ஒவ்வொரு நாளும் எதிர்கொள்ளும் அச்சுறுத்தலின் பேரில் ஆழ்ந்த கவலையின் நிமித்தம் எனது இந்த மேய்ப்புப்பணி கடிதத்தை உங்களுக்கு எழுதுகிறேன்.

இந்த கோவிட்-19 ஏற்படுத்தி வரும் விளைவுகளைப் பற்றி நாம் தொடர்ந்து வாசித்து வருகிறோம். எங்கும் நீடிக்கப் பட்டுள்ள நடமாட்டக்கட்டுப்பாடு நடை முறையில் இருந்தபோதும், தொற்றின் எண்ணிக்கையும் மனத்துயரை ஏற்படுத்தும் மரண எண்ணிக்கையும், குறிப்பாக சிலாங்கூர் மாநிலத்தில் தினசரி அதிகரித்து வருகிறது. முன்பை விட இக்காலத்தில், ஏழைகள் மற்றும் எளிதில் பாதிக்கப் படக்கூடிய பிள்ளைகள் மட்டில் இத்தொற்று கொண்டுவரும் கொடிய பாதிப்புகளை குறித்து அதிகம் கேள்விப் படுகிறோம்.

பொருளாதார, சமூக, உணர்வுப்பூர்வ மான மற்றும் உளவியல் ரீதியிலான பாதிப்புகளுக்கு மேலாக, மக்களின் நல் வாழ்வு அச்சுறுத்தும் வகையில் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த துன்பங் களுக்கிடையில் தற்போதைய அரசியல் நிலைதன்மையற்ற சூழலும் மேலும் நிலையை சீர்குலையைச் செய்கிறது. மலே சியர்களாக இந்த தொற்றைத் தடுத்து நிறுத்த முன்வர வேண்டும்.

இந்த கடுமையான சூழலில் எழுந்துள்ள



அச்சமும் பதட்டமும் மக்களை உதவிகள் மற்றும் நம்பிக்கையற்ற நிலைக்கு உட்படுத்தியுள்ளன. இந்த இருள் சூழ்ந்த பின்னணியானது இந்தத் தொற்றுக்கான முடிவு விரைவில் வந்துவிடும் என்ற நம்பிக்கை அளிப்பதாக இல்லை. மேலும் இந்த கடுமையான சூழலிலும் நம்மில் மாறாமல் இருப்பது, கடவுள் நம்மோடு இருக்கிறார் எனும் நம்பிக்கைதான்-ஆம், நீடித்தப் புயலிலும் அவர் நம்மோடு இருக்கிறார்.

மனிதத் தேவைகளுக்கு உதவிகள் வழங் கிட அதிகரித்து வரும் தனிநபர்கள், பங்குகள் மற்றும் பணிக்குழுக்கள் உண்மையில் கடவுள் நம்மோடு இருக் கிறார் என்பதையும், துன்பத் துயரங்கள் மற்றும் சவால்கள் நிறைந்த காலங்களில் மனிதநேயப் பணிகள் தழைத்தோங்கும் என்பதையும் நமக்கு உணர்த்துகிறது.

இன்று, இந்த சிக்கலான நிலைத் தன்மை யற்ற சூழலில், கடவுளின் நிலை யான வாக்குறுதியான, “சாவின் இருள்சூழ் பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும் நீர் என்னோடு இருப்பதால் எத்தீங்கிற்கும் அஞ்சிடேன்” (திபா 23:4) என்பதை உங்களுக்கு நினைவூட்ட இக்கடிதம் எழுதுகிறேன்.

நம்மில் நிகழும் அனைத்து நன்மைகள் மத்தியில், நிலையான இடைவிடா இறை வேண்டலால் நாம் தனிமையில் இல்லை என்பதை நினைவில் கொள் வோம்.

இயேசுவின் வார்த்தைகளான, “பெருஞ் சுமை சுமந்து சோர்ந்திருப்போரே, எல்லாரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தரு வேன்” (மத் 11:28) என்பதை நினைவுகூரும் வேளையில், கோலாலம்பூர் மாமறை மாவட்டத்தின் அனைத்து கத்தோலிக் கரையும், எதிர்வரும் 15, ஜூலை, 2021 அன்று இயங்கலை வழியாக, இரவு 9.00 தொடங்கி 10.00 வரை இறை வேண்டலில் ஒன்றிணைய அழைக்கிறேன்.

தொடர்ந்து, எதிர்வரும் வெள்ளிக்கிமை, 16, ஜூலை, 2021, (புனித கார்மேல் அன்னை நினைவு நாள்) அன்று, வாருங்கள் நமது தெய்வீக மருத்துவராகிய அன்னை மரியா பரிந்துரைக்காக வேண்டுவோம். தனிநபர்களாக அல்லது குடும்பமாக உங்களது இல்லங்களில் ஆண்டவரின் துக்க மறையுண்மைகளைத் தியானிப்போம். பாவத்தின் மீதும் சிலுவை மரணத்தின் மீதும் அவர் அடைந்த வெற்றி நம்மை இந்த சோதனைச் சூழலிலிருந்து விடுவிப்பதாக.

கடவுள் அனைத்தையும் தமது கட்டுப் பாட்டில் கொண்டுள்ளாதோடு, அவர் நமது வாழ்வை மாற்றிமைக்கும் வல்லமையையும் கொண்டுள்ளார் என்பதை ஏற்கும் நாம், இடைவிடாது மன்றாடுவோம். கடவுளின் தொடர்ச்சியான பாதுகாப்பு உங்கள் மீதும் உங்கள் அன்புக்குரியவர் மீதும் இருப்ப தாக.

உங்களோடு இறைவேண்டலில்,

*பேராயர் ஜூலியன் லியாவ் பெங் கிம்*

*திகதி 9 ஜூலை, 2021*

# ஜோகூர் சுல்தான் உணவு பொருள்கள் தந்துதவினார்

**ஜோகூர் பாரு:** இங்கு இருக்கும் அமலோற்பவ அன்னை பங்கிற்கு, மாநிலத்தின் மேன்மைதாங்கிய சுல்தான் இப்ராகிம் அல்மார்கூம் சுல்தான் இஸ்கண்டர் அவர்கள் 300 பெட்டி உணவுப் பொருள்களைக் கடந்த ஜூலை 7-ம் நாளன்று வழங்கினார். இதுபற்றி கருத்துரைத்தப் பங்குத்தந்தை எட்வர்ட் இராயப்பன் அவர்கள், அப்பங்கு கடந்த எட்டு மாதங்களாக ஏழை மக்களுக்கு உணவு பொருள்கள் வழங்கி உதவி வருவதாகத் தெரிவித்தார். இதனிமித்தம் தற்போது நிதி பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

“சில நாள்களுக்கு முன்பு, இம்மாநிலத்தின் மேன்மை தாங்கிய சுல்தான் இப்ராகிம் அவர்கள் அவரது அறக்கட்டளையின் சார்பாக, எனது பங்கிற்கு உணவு பொருள்கள் வழங்கியுள்ளதாகக் கேள்விப்பட்டு, மாண்புமிகு மேஜர் சீனா டத்தோ டேவிட் வோங் குவோங் அவர்களை நாடினேன். இந்த உணவு பொருள்கள் விநியோகிப்புக்கு இவர்தான் பொறுப்பேற்றிருந்தார். எனது தேடலுக்கு பலன் கிட்டியது. மாண்புமிகு மேஜர் 300 பெட்டிகள் கொண்ட உணவுப் பொருள்களை இப்பங்கிற்கு அனுப்பிவைத்தார்.” என்றார் பங்குத்தந்தை.



இந்த அமலோற்பவ அன்னை ஆலயம் எழுப்பப்பட்டு 138 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. அன்றும் இன்றும் மாநில சுல்தான் மேன்மைதாங்கிய சுல்தான் இப்ராகிம் அவர்களின் உள்ளத்தில் இந்த ஆலயத்தின்பால் உயர்ந்த மதிப்புண்டு. 1800-ஆம் ஆண்டில், இவரது தாத்தா அல்மார்கூம் சுல்தான் அபுபாக்கார் அவர்கள்தான் இந்த நிலத்தை ஆலயத்திற்காக வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த அமலோற்பவ அன்னை பங்கில் ஏழைகளுக்கான உதவிகளுக்கு ஏற்பாடு செய்து வரும் பணிக்குழுவினர், அடிப்படை கிறிஸ்தவ சமூகத்தினருடன் இணைந்து, சமயம், இனம் சாரா வகையில் அனைவருக்கும் பல்வேறு உதவிகளைச் செய்துவருவதோடு. மருத்துவ உதவி களுக்கும் தோள்கொடுத்து வருகின்றனர். மனிதாபிமான சேவைகளுக்கு கத்தோலிக்கத் திருஅவை தொன்றுதொட்டு செய்துவரும் சிறப்புப் பணிகளுக்குக் கிடைத்த அங்கீகாரமாகவும் இந்த உணவுப்பொருள் அன்பளிப்பு அமைகிறது.

மாநில சுல்தான் அவர்களின் உணவுப் பொருள் உதவிக்கு பங்கு மக்களும் பங்குத்தந்தை எட்வர்ட் இராயப்பன் அவர்களும் உள்ளார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

# திருத்தந்தை, ஈராக் பிரதமர் சந்திப்பு

**வத்திக்கான்:** ஈராக் நாட்டுப் பிரதமர் முஸ்தாபா அல்-கதிமி அவர்கள், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை, ஜூலை 02, காலையில், திருப்பீடத்தில் தனியே சந்தித்து கலந்துரையாடினார்.

ஈராக் பகுதியின் சூழல் குறித்தும், உலகளாவிய சமுதாயத்தின் ஆதரவோடு அந்நாட்டில் நம்பிக்கை மற்றும், அமைதியான நல்லிணக்க வாழ்வை மீண்டும் கட்டி யெழுப்புவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள் குறித்தும் இச்சந்திப்புக்களில் கருத்துப் பரிமாற்றங்கள் இடம் பெற்றன.

ஈராக்கில் காலம் காலமாக வாழ்ந்துவரும் கிறிஸ்தவர் களின் வாழ்வைப் பாதுகாப்பதற்கு சட்டமுறைப்படி நடவடிக்கைகள் அவசியம் என்பது இச்சந்திப்பில் உணர்த் தப்பட்டது.

இவ்வாண்டு மார்ச் மாதம் 5ம் தேதி முதல் 8ம் தேதி வரை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஈராக்கில் திருத்தூதுப் பயணம் மேற்கொண்டதன் பலனாக இச்சந்திப்பு வத்திக்கானில் நடைபெற்றது வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும்.



*திருத்தந்தையுடன் ஈராக் பிரதமர் முஸ்தாபா அல்-கதிமி*

# அருள்பணி ஸ்தான் வறியோர் நடுவே வாழ்ந்த இன்றைய புனிதர்

மனித உரிமை செயற்பாட்டாளர் ஸ்தான் சுவாமி எனப்படும் இயேசு சபையைச் சேர்ந்த அருட்தந்தை ஸ்தான் லூர்துசாமி அவர்கள் தனது 84 வது வயதில் ஜூலை 5ம் தேதி மும்பை சிறையில் காலமானார்.

தமிழகத்தில், திருச்சியை அடுத்த விரகலூரில் 26 ஏப்ரல் 1937-ல் பிறந்தவர். இவரது இயற்பெயர் ஸ்தனிஸ்லாஸ் லூர்துசாமி. இவருக்கு 3 சகோதரிகள் மற்றும் 2 சகோதரர்கள் உள்ளனர். பிலிப்பைன்சில் சமூகவியல் மேல் படிப்பை முடித்தார். அங்கு ஆளும் நிர்வாகத்துக்கு எதிராக நடந்த பல்வேறு போராட்டங்களில் பங்கெடுத்தார். அதன் பிறகு இந்தியா திரும்பி பல்வேறு பணிகளை மேற் கொண்டார். 1970 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14ம் தேதி குருப்பட்டம் பெற்றார்.

1975 முதல் 1986-ம் ஆண்டுவரை பெங்களூரில் உள்ள இந்திய சமூகவியல் நிறுவனத்தின் இயக்குநராக இருந்தார். பழங்குடியின ஆலோசனை கவுன்சிலை அமைக்க அரசியலமைப்பின் 5வது அட்டவணையில் உள்ள அம்சங்களை செயல்படுத்தாதது குறித்து அவர் கேள்வி எழுப்பினார்.

அதன் பிறகு தான் வட இந்தியாவை சேர்ந்த ஜார்க்கண்ட்டை நோக்கி பயணமானார். அங்கு பழங்குடியின மக்கள் அதிகமாக வாழ்கிறார்கள். அதுவும் தொலை தூர காடுகளில் இவர்கள் வாழ்வதால், இவர்களுக்கான உரிமைகள் என்பது கேள்விக்குறியாக இருந்தது. அதனால், அங்கேயே போய் தங்கினார். அந்த மக்களின் நில உரிமைகளுக்காக குரல் கொடுத்தார். மற்றொரு புறம் இறை பணியையும் மேற்கொண்டார்.

இவரை பழங்குடி மக்கள் எல்லாரும் "அப்பா" என்றுதான் கூப்பிடுவார்களாம். ஆதிவாசி சமூகத்தின் விடிவெள்ளி என்று கூட இவரை சொல்லலாம். அந்த இன மக்களின் நிலம், காடு, தொழிலாளர் உரிமைகள், ஊதியம் தொடர்பாக கிட்டத்தட்ட 30 வருடங்களுக்கு மேலாக போராடி உள்ளார். பலரின் உரிமைகளையும் பெற்று தந்துள்ளார்.

கடந்த 50 ஆண்டுகளாக ஒரு அருள்பணியாளராகவும், குறிப்பாக, பழங்குடியினரின் வாழ்வாதார உரிமைகளை மீட்டுக் கொடுக்கும் பணியிலும் தன்னையே அர்பணித்துக்கொண்ட தந்தை ஸ்தான் சுவாமி அவர்கள் வேதசாட்சியாய் விதைக்கப்பட்டுள்ளார் என்றும், அவருக்கு தமிழக ஆயர் பேரவை தன் வீர வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறது என்றும் பேராயர் பாப்புசாமி அவர்கள் அறிக்கையொன்றில் கூறியுள்ளார்.



மானுட மாண்பைக் காக்கின்ற வகையில் அரை நூற்றாண்டு உழைத்த ஒரு துறவியை, சமுதாயத்தில் கலகம் விளைவிப்பவராகச் சித்தரித்து, நாளும் துரத்தி வந்த அரசின் போக்கை வன்மையாகக் கண்டிக்கிறோம் என மேலும் அவர் கூறினார்.

இறுதிவரை மும்பை தலோஜா சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். அந்த சிறையில் அவருக்கு எந்த வசதியும் செய்து தரப்படவில்லை. ஒரு கட்டத்தில் அவருக்கு திடீரென உடல்நிலை பாதிப்புற்றது. உணவு சாப்பிட்டால் உணவை மெல்லவும் முடியாதாம், விழுங்கவும் முடியாதாம். இதற்கு பெயர் பார்கின்சன் நோய் என்கிறார்கள். இவருக்கான உடனடி மருத்துவ உதவிகள் நிராகரிக்கப்பட்டன.



உரிய மருத்துவ வசதி கிடைக்காமல் உடம்பு மோசமாகிவிடவும், இந்த விவகாரம் கோர்ட் வரை சென்றது. ஸ்தான் அடிகளாரைப் பரிசோதிக்க ஒரு குழு அமைத்து நீதிமன்றம் உத்தரவிட்டது.

> கருத்துச் சுதந்திரம் என்னும் உரிமையை அமைதியான வழியில் பயன்படுத்தும் யாரும் ஒடுக்கப்படக்கூடாது.

அப்போதுதான் தெரிந்தது, அவருக்கு 2 காதுகளிலும் கேட்கும் சக்தியே போய் விட்டிருந்தது. உடல், கால்களில் நடுக்கம் ஏற்பட்டுள்ளது. உடல் பலவீனமாகி உள்ளது. இதற்கு சிகிச்சை எடுக்க அறிவுறுத்தியும் ஸ்டேன் மறுத்துவிட்டார். "நான் சீக்கிரமாக இறந்துவிடுவேன். அதனால் சிகிச்சைக்கு பதில் என் நண்பர்களுடன் ராஞ்சியில் இருக்கிறேன் என்று அனுமதி கேட்டும் கோர்ட் தரவில்லை. இறுதியில் கொரோனா தொற்றும் சேர்த்து இவரை வாட்டி எடுத்தது.

உரிய மருத்துவ சிகிச்சை கடைசிவரை அவருக்கு கிடைக்கவில்லை. தான் ஆசைப்பட்டது போலவே நண்பர்களுடனும் இருக்க முடியவில்லை. இறுதியில் சிறைக்குள்ளேயே அவரது உயிர் பிரிந்தது. இவரது மறைவினால் ஜார்க்கண்ட் மாநிலமே அதிர்ந்து போயுள்ளது. அப்பா என்று பழங்குடி மக்களின் கதறல் விண்ணை முட்டிக் கொண்டிருக்கிறது!

மேலும், அருள்பணி ஸ்தான் சுவாமி அவர்கள், அநீதிகள் பெருகியிருக்கும் தெருக்களிலும், மலை முகடுகளிலும், தன் பலிபீடத்தை நிறுவி, அருள்பணித்துவத்திற்கு ஒரு புதிய இலக்கணத்தை வகுத்தார் என்று ஆசிய ஆயர் பேரவைகள் கூட்டமைப்பின் தலைவர், கர்தினால் சார்ல்ஸ் மாங் போ அவர்கள் கூறியுள்ளார்.

இந்தியாவின் பழங்குடி மக்களோடு இணைந்து, அருள்பணி ஸ்தான் அவர்களின் மறைவுக்கு வருந்தும் இவ்வேளையில், அவர் நிறுவவிழைந்த நீதியான சமுதாயத்திற்காக உழைக்க நாம் அனைவரும் நம்மையே அர்ப்பணிப்போம் என்ற விண்ணப்பத்துடன், மியான்மார் நாட்டின் கர்தினால் போ அவர்கள் தன் அறிக்கையை நிறைவு செய்துள்ளார்.

இதற்கிடையில், இவரது மரணத்திற்கு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையம் ஆழ்ந்த இரங்கலையும் வேதனையையும் தெரிவித்துள்ளது.

“மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருள்தந்தை ஸ்தான் அடிகளின் மரணம் வேதனையளிக்கிறது.

பழங்குடியினரின் உரிமைகளுக்காக தொடர்ந்து போராடிவந்த அருள்பணி ஸ்தான் அவர்களின் சாம்பல், அவர், தன் இறுதி ஆண்டுகளில் பணியாற்றி வந்த இராஞ்சிக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு புதைக்கப்படவுள்ளது.

-செய்தி தொகுப்பு :
- த. ஜோசப் ஆனந்த்-மலாக்கா

## பௌத்த சமயத்தாருடன் இணைந்து ‘உணவு வங்கி’ எற்படுத்தியது பத்திமா பங்கு

**கோலாலம்பூர்:** மலேசியா அதன் பொது நடமாட்டக் கட்டுப்பாட்டைத் துவக்கி ஏறக்குறைய 56 வாரங்கள் கடந்துவிட்டன. இதனால், ஏழைகள், வறுமைப் பிணியில் சிக்கியவர்கள், புலம்பெயர்ந்தோர் மற்றும் பலவகையில் வாழ்வாதாரத்தில் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு உள்ளதை மறுப்பதற்கில்லை. உணவுப் பொருள்களோடு, இதர அத்தியாவசியப் பொருள்களுக்கு அவதியுறும் மக்களின் இன்னல்களைத் தீர்க்க, இங்கு பிரிக்பீல்சில் இருக்கும் பத்திமா அன்னை பங்கும் அதன் அருகாமையில் இருக்கும் மகா விகாரா என்ற பெயர்கொண்ட பௌத்த சமய ஆலயக் குழுவினரும் இணைந்து ‘உணவு வங்கி’ஒன்றை தோற்றுவித்துள்ளனர்.

இப்பங்கின் நிர்வாகப் பொறுப்பைக் கவனித்துவரும் அருள்தந்தை டாக்டர் கிளரன்ஸ் தேவதாஸ் அவர்கள், ஏழைகளுக்கு உதவிப் பொருள்களை வழங்க இருதரப்பினருக்கும் ஒரு பொதுவான இடவசதி தேவைப்பட்டதாகவும், அதன் பலனாக இந்த ‘உணவு வங்கி’ ஏற்படுத்தப்பட்டதாகவும் தெரிவித்தார். இப்பகுதியில் அமைந்திருக்கும் இதர வழிபாட்டு மையங்களுடனும் எங்களோடு இணைய தொடர்பு கொண்டுள்ளோம் எனவும் மேலும் கூறினார்.




## தம் அன்பினால் நம்மை முன்குறித்து வைத்தார் கடவுள்!

பொதுக்காலத்தின் பதினைந்தாம் ஞாயிறான இன்று நாம் வாசிக்கக்கேட்கும் வாசகங்கள் `தம் அன்பினால் நம்மை முன்குறித்து வைத்த கடவுள், அவருடைய பணிசெய்ய நம்மை அழைக்கின்றார்’ என்னும் உண்மையை மையக்கருத்தாகக் கொண்டுள்ளன. இன்றைய முதல் வாசகத்தில் ஆமோஸ் இறைவாக்கினரின் படிப்பினையை கேட்கிறோம். ஆமோஸ் தென்னாடான யூதாவிலிருந்து வட நாடான சமாரியாவிற்குச் சென்று ஆண்டவருடைய வார்த்தையை எடுத்துரைக்கின்றார். அது பிடிக்காத அமாட்சியா என்ற குரு அவரிடம், இங்கிருந்து யூதாவின் நாட்டுக்கு ஓடி, அங்கே இறைவாக்கு உரைத்து, உன் பிழைப்பைத் தேடிக்கொள். பெத்தேலில் இனி, ஒருபோதும் இறைவாக்கு உரைக்காதே” என்கிறார். அதற்கு ஆமோஸ் மறுமொழியாக, ஆடுகள் ஓட்டிக்கொண்டு போன என்னை ஆண்டவர் தேர்ந்தெடுத்து, ‘என் மக்களாகிய இஸ்ரயேலிடம் சென்று, இறைவாக்கு உரைத்திடு’ என்று அனுப்பினார்” என்கிறார்.

இரண்டாவது வாசகத்தில், கடவுள் தமது திருவுளத்தின் திட்டத்தின்படி அனைத்தையும் செயல்படுத்தி வருகிறார். அவரது தீர்மானத்தால் நாம் முன்குறிக்கப்பட்டு கிறிஸ்து வழியாய் அவரது உரிமைப் பேற்றுக்கு உரியவரானோம் என்று புனித பவுல் நமக்கான அழைப்பை நினைவூட்டுகிறார்.

நற்செய்தியிலோ, இயேசு தாம் தேர்ந்து கொண்ட சீடர்களைப் பணிக்கு அனுப்புகிறார். “பயணத்திற்குத் கைத்தடி தவிர உணவு, பை, இடைக்கச்சையில் செப்புக் காசு முதலிய வேறு எதையும் நீங்கள் எடுத்துக்கொண்டு போக வேண்டாம். ஆனால், மிதியடி போட்டுக்கொள்ளலாம்; அணிந்திருக்கும் அங்கி ஒன்றே போதும்” என்று அறிவுறுத்தினார்.

இதுபோன்ற பணிக்குத் தான் நாமும் அழைக்கப்படுட்டுள்ளோம். நம்மில் பலர் இப்பணியெல்லாம் அருள்பணியாளர்களையும் இருபால் துறவியர்களையும் சார்ந்ததாக எண்ணி ஒதுங்கிக்கொள் கிறோம். அழைக்கப்பட்ட அனைவரும் அருள்பணியாளர்கள் அல்ல. மாறாக, பொதுப்பணிக்கு கடவுளால் அழைக்கப் பட்ட எளிய மக்கள். ஆமோஸ் ஆடு மேய்ப்பவர். அவர் பெரும் அறிவாளியோ, செல்வந்தரோ அல்ல.

இயேசுவும், மறைப்பணிக்குத் தம் சீடர்களை எளியவர்களாகவே அனுப்பினார் என்பதை மாற்கு புலப்படுத்தியதைக் கேட்டோம். நற்செய்தி மறைப்பரப்புக்கு, பகட்டும், ஆடம்பரமும் ஆகாது. இயேசு, அவரோடு தங்கி, அவரோடு தொடர்ந்து வாழந்து கொண்டிருக்கும் சீடரைவிட, வெளியேறிச் சென்று, நற்செய்தியை போதிக்கும் சீடர்களையே விரும்புகிறார். கடவுளின் அழைப்பு எல்லாருக்கும் உண்டு , அவருடைய பணியைச் செய்ய அழைக்கப்படுவோர் அவரை நம்பி மட்டும் பணி செய்ய வேண்டும். உலகம் தரக்கூடிய பேரும் புகழையும் நம்பி அல்ல. அதே வேளையில் நற்செய்திப்பணியை ஏற்று வருவோருக்கு நாம் ஆதரவு தர வேண்டும் என்பதும் இன்று நமக்கு நினைவூட்டப்படுகிறது. அவருடைய பணியை நிறைவேற்ற அழைக்கப்பட்டிருக்கும் நாம், அவரை நம்பிப் பணி செய்வோம். அனைவரையும் ஆண்டவருக்குள் கொண்டு வருவோம். இதன் ஒழியாக இறையருள் நிறைவாய் பெறுவோம். இறை அழைப்பு என்பது நம் அனைவருக்கும் உரியது. அழைப்புக்கேற்ற வாழ்வு வாழ்வோம்.

-A. லூர்தம்மாள், காஜாங்

**பொதுக்காலம் 15-ஆம் ஞாயிறு**

ஆமோஸ் 7: 12-15
திபா 85: 8ab,9. 10-11. 12-13
எபே 1: 3-14
மாற்கு 6: 7-13
ஞாயிறு வாசகம் -ஆண்டு 2
வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1
திருப்புகழ்மாலை - வாரம் 3